<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

<u>OS.NO.105/2017</u> தேதி. 08.08.2024

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. பி.வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 08.08.2024 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கருணாநிதி |
| த/பெ. | : | சிவசண்முகம் |
| வயது | : | 70/2024 |
| தொழில் | : | ஓய்வு பெற்ற தனியார் ஊழியர் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | ஆற்காடு |
| வட்டம் | : | ஆற்காடு |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் வேலை செய்தபோது இராணிப்பேட்டையில் குடியிருந்து வந்தேன். எனக்கு பூர்வீக ஊர் முகமதுபேட்டை ஆகும். திமிரியிலிருந்து 6 கிலோமீட்டார் தொலைவில் உள்ளது. என் தகப்பனார் எல்லாம் முகமது பேட்டையில் இருந்தார்களா என்றால் ஆரம்பத்தில் இருந்தார்கள். நாங்கள் ஆற்காட்டிற்கு 1982 ம் வருடம் கடைசியில் குடிவந்துவிட்டோம். ஆற்காட்டில் 1982 முதல் நெ.60, வேலூர் மெயின்ரோடு, அதன்பின்னிட்டு எண்.18, ராமசாமி தெரு என்ற விலாசத்தில் 1990 வரை இருந்தோன். நான் ஆற்காட்டில் இருந்போது வேலை செய்துகொண்டிருந்தேன். நான் 2009 வரை வேலை செய்து அதன்பிறகு கம்பெனியை முடிவிட்டார்கள். நான்

தற்போது ஆற்காட்டில் குடியிருந்து வருகிறேன். என் தந்தை உயிருடன் இருந்தவரை அவர்மேற்பார்வையில் முகமது பேட்டையில் பயிர் செய்து வியாபாரம் செய்து வந்தார். ஜோதிலிங்கம் மற்றும் கணேசன் ஆகியோர் எனக்கு நெருங்கிய உறவினர்கள் ஆவார்கள். தாவா சொத்துக்கள் முகமது பேட்டையில்தான் உள்ளது. திமிரியில் சார்பதிவு அலுவலகம் உள்ளது. முகமது பேட்டையில் உள்ள சொத்துக்கள் எல்லாம் திமிரி சார்பதிவு அலுவலகதிற்கு உட்பட்டது என்றால் சரிதான். தற்போது ஆற்காடு சார்பதிவு அலுவலகத்தை திமிரி சார்பதிவு அலுவலத்தை இணைத்துவிட்டார். நான் சென்ற விசாரணையில் 33 செண்ட் தனியாக உள்ளது என்றும் அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்ணை விசாரணைக்கு பின்பும் என்ன சர்வே எண் என்று தெரிந்துகொள்ள முயற்சிசெய்யவில்லை. நான் தாக்கல் செய்த எதிர்உரை மற்றும் நிரூபண வாக்குமூலத்திலும் 33 செண்ட் குறித்து எதுவும் குறிப்பிடவிலலை ஏனெனில் அந்த 33 செண்ட் என் அம்மா பெயரில் உள்ளது. அந்த 33 செண்ட் குறித்த ஆவணம் என்னிடம் உள்ளது. மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்ததால்தான் தாவா சொத்தில் உள்ளதா, அந்த சொத்து தனியாக உள்ளது என்பது தெரியவரும் என்றால் சரிதான். **(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை:– ஒத்திவைக்கப்படுகிறது)**